மாலை பதிப்பு
# சுபீட்சம்
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE
05.08.2022 வெள்ளிக்கிழமை supeedsam.com supeedsam@gmail.com

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
supeedsam.com

## சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கைக்கு வராமல்
# இலங்கையை மீட்பது சாத்தியமில்லை
### ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவிப்பு



சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கைக்கு வராமல் இலங்கையை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்பது சாத்தியமில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் இன்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எந்தவொரு பாராளுமன்ற பிரதிநிதியும் இதனை எதிர்த்தால் அதற்கான தீர்வுகளை முன்வைக்க வேண்டும் என ஜனாதிபதி கூறுகிறார்.

## இலங்கைக்கு உதவ இந்தியா தயார்



இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் மற்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரிக்கு இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. இதன்போது, இலங்கைக்கு உதவுவதற்காக இந்தியா தயார் நிலையில் இருப்பதாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் இதன்போது மீண்டும் வெளிப்படுத்தியுள்ளார்.

## மின் வெட்டில்லை

நாளை (06) மற்றும் நாளை மறுதினம் (07) ஆகிய இரு தினங்களில் மின்வெட்டு அமுல்படுத்தப்பட மாட்டாது என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதனிடையே கடந்த சில தினங்களுக்கு முன்னர் நாளாந்தம் சுமார் 3 மணித்தியாலங்கள் மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டிருந்த நிலையில் இன்று (05) ஒரு மணித்தியால காலத்திற்கு அதனை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## ஓகஸ்ட் 10வரை அகற்றப்படாது

உரிய சட்ட விதிகளைப் பின்பற்றாமல் காலி முகத்திடல் “கோட்டா கோ கம” போராட்டப் பகுதியில் உள்ள சட்டவிரோத கூடாரங்களை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை அகற்றுவதைத் தவிர்ப்பதாக சட்டமா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் உறுதியளித்துள்ளார்.

இதன்படி, இது தொடர்பில் பொலிஸ் மா அதிபருக்கு தேவையான அறிவுறுத்தல்களை வழங்கவுள்ளதாக சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சுமதி தர்மவர்தன இன்று (05) மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

எவ்வாறாயினும், குறித்த காலப்பகுதிக்குள் இந்த அனுமதியற்ற கூடாரங்களை அகற்றுவது தொடர்பான ஆரம்ப சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு பிரதிவாதிகளுக்கு எந்த தடையும் இல்லை எனவும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. அத்துடன், தாமாக முன்வந்து பிரதேசத்தை விட்டு வெளியேற விரும்புபவர்கள் வெளியேறுவதற்கு எவ்வித தடையும் இல்லை எனவும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

## அடுத்த வாரம் மூன்று நாட்களுக்கு பாடசாலை

அடுத்தவாரம் மூன்று நாட்களுக்கு மட்டுமே பாடசாலை நடைபெறும் என கல்வியமைச்சு அறிவித்துள்ளது. அதனடிப்படையில், திங்கள், செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் மட்டுமே பாடசாலைகள் நடைபெறும். வியாழக்கிழமை போயா தினமாகும். வெள்ளிக்கிழமை நிகழ்நிலை ஊடாக கற்றல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்றும் கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

## நால்வர் மரணம்

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது. அதற்கமைய, இலங்கையில் கொரோனா தொற்றால் நேற்றைய தினம் (04) மேலும் 4 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## பெற்றோலுக்கு முற்பதிவு

அடுத்த மாதத்திற்கு தேவையான எரிபொருளுக்கு முற்பதிவு செய்யப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. குறித்த கப்பல்களுக்கான கட்டணம் எதிர்வரும் நாட்களில் செலுத்தப்படும் என அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## மாணவர்களுக்கு விரைவில் கொவிட் தடுப்பூசிகள்

கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் மாணவர்களுக்கு கொரோனா தடுப்பூசிகளை துரிதமாக வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மருத்துவ அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், சுகாதாரப் பழக்கவழக்கங்களை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## எரிவாயுவின் விலை குறைப்பு

எதிர்வரும் 8ஆம் திகதி நள்ளிரவுடன் லிட்ரோ சமையல் எரிவாயு கொள்கலன் விலை குறைக்கப்படவுள்ளது. இதன்படி, 12.5 கிலோகிராம் கொள்கலன் ஒன்று சுமார் 200ரூபாவினால் குறைக்கப்படும் என லிட்ரோ ட் நிறுவன உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன. லிட்ரோ சமையல் எரிவாயு விலை இன்று நள்ளிரவுடன் குறைக்கப்படும் என முன்னதாக அதன் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்திருந்தார். எனினும், எதிர்வரும் திங்கட்கிழமை நள்ளிரவுடன் லிட்ரோ சமையல் எரிவாயு விலை குறைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஒரு மூடை யூரியா பசளை 15,000ரூபா

தேயிலை, சோளம், உருளைக்கிழங்கு செய்கை யாளர்கர் ளுக்காக ஒரு மூடை யூரியா பசளையை 15,000 ரூபாவிற்கு வழங்க விவசாய அமைச்சுச் தீர்மானித்துள்ளது. இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்டட் 30 ஆயிரம் மெற்றிக் டன் யூரியா பசளையை கமநல மத்திய நிலையங்களுக்கு விநியோகிக்கும் செயற்பாடு கடந்த 3ஆம் திகதியுடன் நிறைவடைந்தது. நெற் செய்கைக்காக ஒரு மூடை யூரியா பசளை 10 ஆயிரம் ரூபாவிற்கு வழங்கப்பட்டடது. எனினும், தேயிலை, சோளம், உருளைக்கிழங்கு செய்கையாளர்களுக்காக ஒரு மூடை யூரியா பசளையை 15 ஆயிரம் ரூபாவிற்கு வழங்கவுள்ளதாக விவசாய அமைச்சுச் தெரிவித்துள்ளது.

## ஆறு இலட்சம் கடவுச்சீட்டுக்கள் விநியோகம்




நாட்டில் கடந்த 7 மாதங்களில் சுமார் 6 இலட்சம் கடவுச்சீட்டுகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக குடிவரவு – குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

குடிவரவு – குடியகல்வு திணைக்களத்தின் பிரதி கட்டுப்பாட்டாளர் பியுமி பண்டார இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் ,

நாட்டில் முதல் ஏழு மாதங்களில் சுமார் 6 இலட்சம் கடவுச்சீட்டுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு இதே காலப்பகுதியில் 147,192 கடவுச்சீட்டுகளே விநியோகிக்கப்பட்டுள்ளன. கடந்த ஜுலை மாதத்தில் ஒருநாள் மற்றும் சாதாரண சேவைகளில் கடவுச்சீட்டுக்களைப் பெற்றுக் கொள்வதற்காக 101,777 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. இவற்றில் 98,124 பேருக்கு மாத்திரமே கடவுச்சீட்டுக்களை வழங்க முடிந்துள்ளது. மத்திய வங்கியின் அண்மைய அறிக்கையின்படி இந்த ஆண்டின் முதல் அறையாண்டில் 140,701 பேர் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக சென்றுள்ளனர். எனினும் 2021 ஆம் ஆண்டில் 117,952 பேர் மட்டுமே வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக சென்றுள்ளனர்.

## கர்ப்பிணி - பாலூட்டும் தாய்மாருக்கு திரிபோஷா

கர்ப்பிணித் தாய்மாருக்கும், பாலூட்டும் தாய்மாருக்கும் திரிபோஷா மற்றும் ஊட்ட சச்த்துத் பொருட்களை தொடர்ச்சியாக வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக குடும்பநல சுகாதார பணியகம் தெரிவித்துள்ளது. தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் குழந்தைகளுக்கு தாய்ப்பாலூட்டலானது குடும்பத்திற்கு பொருளாதார ரீதியாக மேற்கொள்ளப்படும் பாரிய நிவாரணமாகும் என அந்த பணியகத்தின் பணிப்பாளர் விஷேட வைத்தியர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்துள்ளார்.

## செய்முறை பரீட்சைக்கு தோற்றாதோருக்கு வாய்ப்பு

2021ம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சையின் செய்முறை பரீட்சையில் பகுதியளவு அல்லது முழுமையாக தோற்றாத பரீட்சாத்திகளுக்கு மீண்டும் தோற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்படவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை காரணமாக செய்முறை பரீட்சையில் தோற்றாத பரீட்சாத்திகள் எதிர்வர் ரும் 10ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பரீட்சை சுட்டெண், பெயர், பாடம் தொலைபேசி இலக்கம் என்பவற்றுடன் 0718 15 67 17 எனும் வட்ஸ்ட் ஸ் அப் இலக்கத்திற்கோ அல்லது **slexamseo@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பங்களை சமர்பிக்க முடியும்.

சுபீட்சம்
supeedsam@gmail.com
supeedsam.com
வெள்ளிக்கிழமை
சுபீட்சம் 05 ஆகஸ்ட் 2022


# நாட்டின் எதிர்காலத்தை பாதிக்கும்

**நூருல் /ஹுதா உமர்**

1இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட அரகல போராட்டக்காரர்களை விடுதலை செய்ய ஜனாதிபதி உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சி வேண்டுகோளொன்றை விடுத்துள்ளது. ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சி தலைவர் கலாநிதி அன்வர் முஸ்தபா விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

இந்தக் கைதானது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகவும் பழிவாங்கும் செயற்பாடாகவுமே அமைந்துள்ளது. இவ்வாறான அடக்குமுறைகளை ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சி வன்மையாக கண்டிப்பதாகத் தெரிவித்துள்ள அவர், இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு நாட்டில் தமது உரிமைகளை, தேவைகளை கேட்டும் மற்றும் போராடியும் பல தொழிற்சங்கள் கடந்த காலங்களில் பெற்றுள்ளது. அவ்வாறான ஒரு போராட்டத்தையே முன்னிறுத்தி காலிமுகத்திடல் போராட்டகாரர்களும், இலங்கை ஆசிரியர் சங்கத்தினரும் கடந்த ஓரிரு மாதங்களாக மேற்கொண்டிருந்தனர்.

அதிகார இரும்புக்கரங்களை கொண்டு அடக்குமுறைகளில் ஈடுபடுவதிலிருந்து விடுபடுவதன் ஊடாகவும் நாட்டு மக்களின் நம்பிக்கையுடன் கூடிய முன்னேற்றகர செயற்பாடுகளினூடாக நாட்டின் இன்றைய வீழ்ச்சி நிலையிலிருந்து மக்களை காப்பாற்ற முடியும் எனவும், வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்ப முடியும் எனவும் தெரிவித்துள்ளார் . ஜனநாயக நாடான எமது இலங்கை தேசத்தில் மனிதாபிமானத்தையும், உச்சகட்ட ஜனநாயக மரபுகளையும் சீராக பேணுவதன் மூலமே உதவ எண்ணம் கொண்டுள்ள சர்வதேச நாடுகளினதும், சர்வதேச அமைப்புக்களினதும் ஒத்துழைப்பையும் உதவிகளையும் நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

இதே நேரத்தில் போராட்டத்தின் பாதையை மாற்றி பொதுச்சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பது, அரச காரியாலயங்கள், அரச நிறுவனங்களுக்குள் அத்துமீறி நுழைவது ஜனநாயக போராட்டங்களுக்கு அழகல்ல. குறிக்கோளின் வரம்புகளை மீறி போராட்டக்காரர்கள் செயற்படுவது இலங்கை தேசத்தின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கும். ஜனநாயக வழியில் நாட்டின் நலனை முன்னிறுத்தி போராடுவதே சிறந்தது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# போராட்டக்காரர்களை விடுதலை செய்யுங்கள்

## ரிஷாட் எம்.பி வலியுறுத்து

கைது செய்யப்பட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட போராட்டக்காரர்களை, உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார். இந்தக் கைதினை தமது கட்சி வன்மையாக கண்டிப்பதாகத் தெரிவித்துள்ள அவர், ஜனநாயக அடக்குமுறைகளில் இருந்து விடுபடுவதன் ஊடாக மட்டுமே நாட்டின் இன்றைய அவல நிலையிலிருந்து மக்களை காப்பாற்ற முடியும் எனவும், வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்ப முடியும் எனவும் தெரிவித்துள்ளார். ஜனநாயக விழுமியங்களை பேணுவதன் மூலமே சர்வதேச நாடுகளினதும், சர்வதேச அமைப்புக்களினதும் ஒத்துழைப்பையும் உதவிகளையும் நாம் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, பழிவாங்கும் எண்ணத்தைக் கைவிட்டு, அநியாயமாகக் கைது செய்யப்பட்ட ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட போராட்டக்காரர்களை உடன் விடுதலை செய்யுமாறு கோருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# உலர் உணவு பொதிகள் வழங்கி வைப்பு




**ஹஸ்பர்**

தம்பலகாமம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதியில் வாழும் தாய் தந்தையை இழந்த பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கான உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டன. திருகோணமலை மாவட்ட செயலாளர் பி.எச்.என்.ஜயவிக்ரம தலைமையில் நேற்று (04) தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் வைத்து இடம் பெற்ற குறித்த நிகழ்வில் **Budfhas Light International Association** எனும் அமைப்பின் அனுசரனையில் இடம் பெற்றது. நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் குறித்த நிகழ்வு இடம் பெற்றது இதில் 12 நபர்களுக்கு தலா 6000 ரூபா பெறுமதியான உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டன. இதில் தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி, நன்னடத்தை சிறுவர் திணைக்கள ஆணையாளர் தனுஜா திசாநாயக்க, தாய்வான் நாட்டின் டீரனனாயள சர்வதேச அமைப்பின் தென் ஆசிய இணைப்பாளர் பிக்குனி ஊாரநா ஆநபெ மற்றும் மாவட்ட சிறுவர் நன்னடத்தை இணைப்பாளர், மாவட்ட பெண்கள் அபிவிருத்தி இணைப்பாளர் என பலர் கலந்து கொண்டனர்.

# வடமராட்சி கிழக்கில் கிணறுகள் கையளிப்பு








சுவிஸ் வடமராட்சி கிழக்கு ஒன்றியத்தின் 15 ஆண்டு நிறைவை முன்னிட்டு வடமராட்சி கிழக்கில் கிணறு இல்லாத 7குடும்பங்களுக்கு கிணறு கட்டி கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வு அண்மையில் வ.தவராசா தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக வடராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் கு.பிரபாகரமூர்த்தி அவர்களும் கௌரவ விருந்தினராக மருதங்கேணி வைத்தியசாலை வைத்தியர் பா.தினகரன் அவர்களும் சிறப்பு விருந்தினராக மருதங்கேணி கோட்டக்கல்வி பணிப்பாளர் சிறி ராசமசந்திரன் அவர்களும் வைத்தியர் சிவனேசன் அவர்களும் பாடசாலை அதிபர்கள் மற்றும் பயனாளிகளும் கலந்து கொண்டனர். சுவிஸ் வடமராட்சி கிழக்கு ஒன்றியத்தின் செயலாளர் க. பாஸ்கரன்ரூபவ் உறுப்பினர்களான விஜிதகுமார்ரூபவ் குலசேகரம் ஆகியோரும் கலந்து கொண்டனர். இதில் பயனாளிகளுக்கு தென்னங்கன்றுகளும் வழங்கப்பட்டது

# இந்திய வர்த்தக பிரதிநிதிகள் எதிர்கட்சி தலைவரை சந்திப்பு



இந்திய வர்த்தக அமைப்பின் பிரதிநிதிகள் குழுவிற்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிற்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று (04) கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம் பெற்றது. இதுவரை இலங்கைக்கு சுமார் 4 பில்லியன் அமெரிக்க டொலர்களை இந்தியா உதவியாக வழங்கியுள்ளதோடு, இது இலங்கைக்கு வழங்கப்பட்ட மிகப்பெரிய பங்களிப்புகளில் ஒன்றாகும் என எதிர்க்கட்சித் தலைவர் இங்கு நன்றியுடன் நினைவு கூர்ந்தார். நீண்ட காலமாக இலங்கைக்கு இந்தியா வழங்கி வரும் ஆதரவையும் நட்புறவையும் மனதார நினைவு கூர்ந்த எதிர்க்கட்சித் தலைவர், இந்தியாவின் ஆதரவை இலங்கையர்கள் சகோதரத்துவத்துடன் வரவேற்கின்றனர் எனவும், இந்தியா மிகச் சிறந்த நட்பு நாடு எனவும் அவர் தெரிவித்தார். நூற்றாண்டுகளுக்கும் மேலான இந்திய – இலங்கை நட்புறவு மற்றும் தொடர்புகளைக் கொண்ட வரலாற்று சிறப்புமிக்க காலத்தை நினைவு கூர்ந்த எதிர்க்கட்சித் தலைவர், எமது நாட்டில் அதிக முதலீடு செய்ய இந்திய வர்த்தக சமூகத்தை ஊக்குவிக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.





“தேனாட்டில் கதிர்காமம் என புகழ்ந்து கூறும்
தாந்தாமலை சென்று சண்முகனை வழிபட்டால்
அல்லல்போம், தொல்வினைபோம் ஆன
செல்வமத்தனையும் இன்பமுடன் பெற்று இனிது வாழ்வாரே”

அனைத்து விதமான ஆலய வெண்கலப்பொருட்கள், வீட்டுக்குத் தேவையான
அனைத்துப் பொருட்களையும் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய இடம்

குணா மல்ரி சொப் மற்றும் உமா பென்சி ஹவுஸ்
பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை



# தாந்தாமலை அருள்மிகு ஸ்ரீ முருகன் ஆலய

# வருடாந்த மகோற்சவப் பெருவிழா -2022


**திருக்கொடியேற்றம்**
**22.07.2022 வெள்ளிக்கிழமை**


**தீர்த்தோற்சவம்**
**12.08.2022 வெள்ளிக்கிழமை**

இலங்கை திருநாட்டின் இயற்கை எழில் கொஞ்சும் கிழக்கு மாகாணத்தில் மீனனிங்கள் கவிபாடும் மட்டக்களப்பில் வந்தோரை வாவென்று அழைக்கும் மக்கள் வாழ்கின்ற தேசம் படுவான்கரையில் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட ஒரு எல்லையிலும் அம்பாரை மாவட்டத்திற்கு அயலிலும் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் இருந்து 10மைல் கல் தொலைவில் காடும் காடுசார்ந்த பிரதேசமும், மலையும் மலைசார்ந்த பிரதேசமும், வயலும் வயல் சார்ந்த பிரதேச நிலமும் சூழ அமையப்பெற்றுள்ள இடமே தாந்தாமலை அங்கு எழுந்தருளி அருள் மழை சொரியும் முருகப் பெருமானின் கோயில் வரலாறு தொன்மை வாய்ந்தது. இவ்வாலயத்தின் வரலாறு கூத்திகன் – சேனன், உலகநாச்சி, ஆடகசௌந்தரி, குளக்கோட்டன், ஆகியோருடன் தொடர்பு பட்டு நிற்பதை வரலாற்றுச் சான்றுகளும், கர்ணபரம்பரைகதைகளும் சான்று பகிர்கின்றது. ஆதியில் ஆதிதிராவிடர்களின் மரவழிபாட்டுடன் தொடர்புடையதாக கொக்கட்டிச்சோலை தான்தோன்றிஸ்வரர் வழிபாடும் திறந்த வெளிக்கோயிலாக தாந்தாமலையும் இருந்ததாக கர்ண பரம்பரைகதைகளூடாக அறியமுடிகின்றது. தாந்தாமலையின் உச்சியில் சிலந்தி மரம் ஒன்றும் அதனடியில் பிள்ளையார் ஒன்றும் இருந்தன என்பதை அறியக்கூடியதாகவுள்ளதோடு கதிர்காம க்ஷத்திரியர்களின் வழிபாட்டு தலமாக தாந்தாமலை இருந்துள்ளது. ஆடகசௌந்தரி ஆட்சி காலத்தில் தாந்தாமலை ஆலயத்தை தரிசித்ததாகவும் மாளிகை அமைத்து தங்கியும் இருந்ததாகவும் கர்ண பரம்பரை கதைகள் கூறுகின்றது இதற்குச் சான்றாக இன்றும் இரசதானி அமைந்திருந்த தடயங்களும் கற்றூண்களும் மற்றும் சிற்பவேலைப்பாடுகள் சிதைந்து அழிந்த கற்களும் காணக்கிடக்கின்றன. இப்பிரதேசம் மலையும் மலைசார்ந்த இடமும், வயலும் வயல் சார்ந்த இடமுமாக உள்ளதால் அதிகளவான மக்கள் மழையை நம்பி விவசாயம் செய்கின்றனர் அதனடிப்படையில் மழை இல்லாத காலத்தில் மலைப்பிள்ளையாருக்கு பொங்கல் வைத்து பூசை செய்தால் மழை பொழிந்து இன்புற்ற வரலாறுகள் உள்ளதுடன் அது இன்றும் வழக்கத்தில் உள்ளதை காணமுடிகின்றது.

**22.07.2022ம் திகதியிலிருந்து தொடர்ச்சியாக கிராம ரீதியான திருவிழாக்கள் நடைபெறும்**

**12.08.2022ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 5மணிக்கு எம்பெருமானுக்குரிய புண்ணிய தீர்த்தோற்சவம் நடைபெறும்**





**விளம்பர அனுசரணையாளர் : சோமசுந்தரம் சுரேஸ் (முனைக்காடு)**

### ஆட்டோ பிரயாணத்துக்கான நியாயமான
# தொகை அறவிடுங்கள்

**(ந.குகதர்சன்)**

முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் பயணிகளிடம் இருந்து அறவீடு செய்யும் பிரயாணத்துக்கான தொகை நியாயமானதாக வரையறுக்கப்பட வேண்டும் என ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.நௌபர் தெரிவித்தார். ஓட்டமாவடி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட ஆட்டோ சாரதிகள் சங்கங்களினால் தற்கால எரிபொருள் பிர்சனைகள் தொடர்பில் ஓட்டமாவடி பஸ் தரிப்பு நிலைய கட்டடத்தில் நேற்று வியாழக்கிழமை இரவு விசேட கூட்டம் நடைபெற்றது.

ஓட்டமாவடி முச்சக்கர வண்டிகள் சாரதிகள் சங்கத்தின் தலைவர் எஸ்.எல். எம்.யூஹாரி தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.நௌபர் மற்றும் சபையின் செயலாளர் எஸ்.எம்.சிஹாப்தீன் உட்பட ஆட்டோ சாரதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலின் போது ஆட்டோ சாரதிகள் சங்கம் தற்போது எதிர்நோக்கும் எரிபொருள் மற்றும் பொருளாதார பிரச்சனைகள் மற்றும் சவால்கள் தொடர்பிலும் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

முச்சக்கர வண்டி தரிப்பிடத்திற்கு பெயர் பலகை இடல், குறிப்பிட்ட காலத்திற்கு புதிய தரிப்பிட அனுமதி வழங்குவதில்லை, சங்கத்தின் கீழ் செயற்படும் முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் பயணிகளிடம் இருந்து அறவீடு செய்யும் பிரயாணத்துக்கான தொகை நியாயமானதாக வரையறுக்கப்பட வேண்டும். தற்போது முச்சக்கர வண்டிகளுக்கு கியூஆர் (QR) குறி முறைப்படி ஐந்து லீற்றர் பெற்றோல்கள் வழங்கப்படுகின்றன. தொழில் நிமித்தம் ஈடுபடுத்தப்படும் முச்சக்கர வண்டிகளுக்கு எரிபொருள் போதுமானதாக இல்லை இவைகள் குறைந்த பட்சம் வாரத்திற்கு 10 லீற்றராக அதிகரிக்கப்பட வேண்டும் என ஆட்டோ சாரதிகள் சங்கத்தினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இதற்கு அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர் ஆகியோரிடம் சிபார்சு பெற்று இதற்கான அனுமதியை பெற்றுத் தருவதாக சபையின் செயலாளர் எஸ்.எம். சிஹாப்தீன் தெரிவித்தார்.

ஓட்டமாவடி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ளூர் சேவைக்கு புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தனியார் பஸ் சேவையை பாடசாலை சேவைக்கு மாத்திரம் பயன்படுத்துவது தொடர்பாகவும் அதனை இடைநிறுத்துவதா என்பது தொடர்பிலும் பஸ் உரிமையாளர்களுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுப்பதாக ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.நௌபர் தெரிவித்தார்.

### மட்டக்களப்பில் பெண்களுக்கு தனியான ஒழுங்கமைப்பில்
# எரிபொருள் விநியோகம்



**(எஸ்.எஸ். அமிர்தகழியான்)**

மட்டக்களப்பில் உள்ள சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெண்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் பிரத்தியோக வரிசைகள் ஒழுங்கு செய்யப்பட்டு நேற்று (04) திகதி எரிபொருள் வழங்கப்பட்டது. எரிபொருளை பெற்றுக் கொள்வதற்காக பெண்கள் இரவு பகலாக வரிசையில் காத்திருந்து சிரமத்தை எதிர்நோக்கி எரிபொருளை பெற்றுக்கொள்ள நேர்ந்தமையினால், பெண்களுக்கென தனியான வரிசையில் மட்டக்களப்பு நகர் பகுதியில் இன்று பெற்றோல் விநியோகிக்கப்பட்டிருந்து. அரச திணைக்களம் மற்றும் தனியார் துறையில் கடமையாற்றும் பெண்கள் எரிபொருளைபெற்றுக்கொள்வதில் அசௌகரியத்தினை எதிர்நோக்கி வந்திருந்த நிலையில் அவர்களும் இலகுவாக குறுகிய நேரத்திற்குள் பெற்றோலை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு இன்று கிடைத்திருந்தது.

தற்போது (QR) முறைமை அடிப்படையில் மிகவும் சுமூகமாக அனைத்து தரப்பினருக்கும் எரிபொருள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு கற்பிணித்தாய்மாருக்கும் தனியான வரிசையில் பெற்றோல் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





சித்தருள் சித்தர் ஸ்ரீசித்தானைக்குட்டி சுவாமியின் 71 வது குருபூசை இன்று(5) வெள்ளிக்கிழமை காரைதீவு சித்தர் மடாலயத்தில் நடைபெற்ற போது.. **(படங்கள் காரைதீவு நிருபர் சகா)**

# நுவரெலியா கிளையின் விசேட நிகழ்வுகள்




**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

இலங்கை வங்கி தனது 83 ஆவது ஆண்டு விழாவினை முன்னிட்டு நுவரெலியா கிளையின் முகாமையாளர் எம்.ராமன் தலைமையில் விசேட நிகழ்வுகள் இடம்பெற்றன. இதன்போது சர்வமத பிராத்தனைகள் நடைபெற்று கேக் வெட்டி கொண்டாடப்பட்டதுடன் விவசாய மற்றும் வீடமைப்பு கடன் உதவிகள் பயனாளிகள் சிலருக்கு வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் நுவரெலியா இலங்கை வங்கி கிளையின் முகாமையாளர் பி.விஸ்வநாதன், நுவரெலியா பிரதேச செயலாளர் விதுர சம்பத், நுவரெலியா மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் உடுகம சூரிய, நுவரெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரேமலால் மற்றும் நுவரெலியா இலங்கை வங்கி கிளையின் உத்தியோகத்தர்கள் உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்துக்கொண்டனர்.

## வருடாந்த மஹோற்சவம்

**(வடமலை ராஜ்குமார்)**

திருகோணமலை நகரிலே வில்லூன்றியம்பதியில் அருள்பாலித்து வரும் வில்லூன்றிக் கந்தசுவாமி தேவஸ்தானம் ஆலய வருடாந்த முகோற்சவம் நிகழும் சார்வரி வருடம் ஆடி மாதம் 26ம் நாள்(11.08.2022) வியாழக்கிழமை பூரணை திதியில் அவிட்ட நட்சத்திரமும் கூடிய புண்ணிய சுப தினத்திலே ஆரம்பிக்கப்படவுள்ளது.

# சம்மாந்துறையில் அரச உதவியில் தங்கியிருப்பது கவலையளிக்கிறது

**சம்மாந்துறை தவிசாளர் நௌசாட்**

**(நூருல் /ஹுதா உமர்)**

வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழ்கின்றோம் என்ற பிரகடனத்துடன் சம்மாந்துறையில் ஏறத்தாழ 52 சதவீதமான குடும்பங்கள் அரச உதவியிலேயே தங்கி வாழ்கின்றது. இதனை சம்மாந்துறையின் குடிமகனாக ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. என்னுடைய மனதில் நீண்டகாலமாக இருந்துவரும் இந்த மனக்குறையைப் பற்றி சம்மாந்துறை பிரதேச செயலாளரிடம் தெரிவித்திருக்கிறேன். இது வெட்கப்படும் விடயமாகவே உள்ளது. 24 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட விவசாய காணிகள் உள்ளது. அதில் பயிர்செய்கைகளும் இடம்பெறுகிறது. ஆனால் 52 சதவீதமான குடும்பங்கள் அரச உதவியிலேயே தங்கி வாழ்கின்றது என்றால் அது எப்படி நியாயப்படுத்த முடியும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளருமான ஏ.எம்.எம்.நௌசாட் கேள்வியெழுப்பினார்.

நேற்று இடம்பெற்ற சம்மாந்துறை சமூக சேவைகள் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டு ஒன்றிய அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம அதிதியாகயாக கலந்துகொண்டு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், மாற்றங்கள் அவரவர் மனதிலிருந்தும், அடிப்படையிலிருந்து வர வேண்டும். அரச அல்லது தனியார் உதவிகள் சரியாக இனங்கண்டு உரியவர்களுக்கு கொண்டு சேர்க்கப்பட வேண்டும். பிழையான தகவல்களை வழங்கி அரச, தனியார் உதவிகள் பெறுவது பாவம் (பிழை) என்ற நிலைக்கு மக்களாகிய நாம் வர வேண்டும். அதைத்தான் இறைவனும் ஏற்றுக்கொள்வான்.

நாட்டின் நிலையை கருத்தில் கொண்டு உணவின்றி இருக்கும் மக்களுக்காக ஏதாவது செய்வது தொடர்பில் சம்மாந்துறை முக்கிய அமைப்புகளுடன் அண்மையில் கலந்துரையாடல் ஒன்றை செய்திருந்தேன். ஆனால் சம்மாந்துறையின் இளைஞர்கள் தாமாக முன்வந்து அந்தப்பணியை வெற்றிகரமாக செய்தார்கள். இதன்போது சேகரிக்கப்பட்ட அவர்களின் தகவலைகளை அடிப்படையாக கொண்டு இனிவரும் காலங்களில் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுக்க முடியும் என்று நம்புகிறேன். சமூக சேவைகள் இறைவனுக்கு பயந்து முன்னெடுக்கப்பட வேண்டும். பயனாளிகளை பகிரங்கப்படுத்தி அவர்களை பொதுவெளியில் சங்கடப்படுத்துவது எப்போதும் யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாதது.

இன்று நாம் இருக்கும் நிலைக்கு நாம் எல்லோரும் பொறுப்பாளிகள். வருமானத்தை மீறி செலவு செய்யும் பழக்கத்தினால் தான் இன்று இந்த நிலை உருவாகியுள்ளது. சம்மாந்துறை பிரதேசத்தில் 300 க்கு மேற்பட்ட சமூக சேவைகள் அமைப்புக்கள் இருக்கிறது. ஆனால் இயங்குநிலையில் உள்ளது விரல்விட்டு என்னும் அளவுக்கே இருக்கிறது. இதனை பெரும் குறைபாடாக நான் பார்க்கிறேன். என்னுடைய பொதுவாழ்வில் நான் நிறைய விடயங்களை அறிந்துகொண்டு அதனூடாக என்ன வழிகாட்டல் இருக்கின்றது என்று பார்க்கிறேன்.

சமூக சேவைகள் மூலம் சமூகம் கட்டியெழுப்பப்பட வேண்டும். இப்போது அரசியல் எனும் சொல் மக்களுக்கு மிகவும் வெறுப்பாக மாறியுள்ளது. சமூக சேவை அமைப்புக்களுடன் இணைந்து பிரதேசத்தின் கட்டமைப்பில் மேம்பாட்டை உருவாக்க எப்போதும் தயாராக இருக்கிறோம்.– என்றார்.

### பெரியகல்லாறு உதயபுரம் தமிழ் வித்தியாலயத்தில்
# விழிப்புணர்வு நிகழ்வு

**(இ.சுதாகரன்)**

பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட பெரிய கல்லாறு உதயபுரம் தமிழ் வித்தியாலயத்தில் மாணவர்களுக்கு வளர் இளம் பருவம் ,கட்டிளமைப்பருவ மாற்றம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு பெரிய கல்லாறு உதயபுரம் தமிழ் வித்தியாலய முதல்வர் சித்திரவேல் சசிதரன் தலைமையில் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்றது. நிகழ்வில் வித்தியாலயத்தின் பிரதி அதிபர்.த.சசிகாந்தன் ,களுவாஞ்சிகுடி பிரதேச பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி ஏ.உதயசூரியா மற்றும் சிரேஷ்ட பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ்.யோகேஸ்வரன்,உட்பட பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள்,சிரேஷ்ட குடும்ப நல உத்தியோகத்தர்கள் ,குடும்ப நல உத்தியோகத்தர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது கட்டிளமைப்பருவ மாணவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அவற்றினை எதிர் கொள்ளும் வீதம் அவற்றிக்கு தீர்வு காணும் வழி முறைகள் தொடர்பான விளக்கங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# விநியோகத்தர்களிடம் கலந்துரையாடல்





**(எப்.முபாரக்)**

கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் எரிபொருள் விநியோகத்திற்கு பொறுப்பான தரப்பினருடன் விசேட கலந்துரையாடல் ஒன்றை பிரதேச செயலாளர் என்.எம். திருமதி உபேக்ஷா குமாரி அவர்களின் தலைமையின் கீழ் இன்று(5) நடத்தப்பட்டது. இதன்போது அதிகளவான மக்கள் தமது ஆதரவை வெளிப்படுத்திய QR code முறையின் கீழ் எரிபொருள் விநியோகம் செய்யும் போது பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை குறைத்து அரசாங்கம் வழங்கிய விதிமுறைகளுக்கு அமைய எவ்வாறு செயற்படுவது என்பது குறித்து கலந்துரையாடப்பட்டது. கிவ் ஆர் முறைகள் தொடர்பில் ஏதாவது குளறுபடிகள் தொடர்பிலும் கலந்தாலோசிக்கப்பட்டன.

இதில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், உதவிப் பிரதேச செயலாளர், உதவி திட்டமிடல் பணிப்பாளர், காரியாலய உத்தியோகத்தர்கள், கந்தளாய் டிப்போ அத்தியட்சகர், எரிபொருள் நிரப்பு நிலையங்களை கண்காணிக்க நியமிக்கப்பட்ட அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர்கள் உட்பட முப்படை அதிகாரிகளும் கலந்து கொண்டார்கள்.

# பூஸ்டர் தடுப்பூசியை ஏற்றிக்கொள்ள வேண்டுகோள்

**( வாஸ் கூஞ்ஞ)**



நாட்டில் தற்பொழுது மீண்டும் தோன்றியுள்ள கொரோனா தொற்று நோயானது மன்னாரிலும் இவ் நோயாளரால் பீடிக்கப்படுவோர் நாளாந்தம் இனம் காணப்பட்டு வருவதால் பூஸ்டர் தடுப்பூசி இதுவரைக்கும் போடாதவர்கள் இவ் தடுப்பூசியை போடுவதன் மூலம் இவ் நோயால் ஏற்படும் அனர்த்தங்கலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள முடியும் என மன்னார் மாவட்ட தொற்றுநோய் விஞ்ஞான பிரிவு வைத்திய கலாநிதி கதிர்காமநாதன் சுதாகர் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட தொற்றுநோய் விஞ்ஞான பிரிவு வைத்திய கலாநிதி கதிர்காமநாதன் சுதாகர் அவர்களை மன்னார் மாவட்டத்தின் கொரோனா தொற்று நோய் தொடர்பாக வினவியபோது அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தில் தற்பொழுது இம் மாதத் தொடக்கத்திலிருந்து நாளாந்தம் சுமார் பத்து கொரோனா தொற்றாளர்கள் இனம் காணப்பட்டு வருகின்றனர்.

இவ் இனம் காணப்படும் தொற்றாளர்கள் மன்னார் மாவட்டத்தில் ஒரு இடம் என்று அல்லாது மன்னார் மாவட்டத்தில் பரவலாகவே இனம் காணப்பட்டு வருகின்றனர். ஏற்கனவே இவ் தொற்றாளர்கள் மன்னாரில் நானாட்டான் முசலி பிரதேச பிரிவுகளில் அதிகமாக அடையாளம் காணப்பட்டு வந்தபோதும் தற்பொழுது இவ் தொற்றாளர்கள் மன்னாரில் பரவலாக அனைத்து பிரதேச செயலக பிரிவுகளிலும் காணப்பட்டு வருவதாக தெரிவித்தார். ஆகவே ஏற்கனவே இவ் தொற்று நோயிலிருந்து விடுபடும் நோக்குடன் பூஸ்டர் மருந்து ஏற்றாதவர்கள் தற்பொழுது இவ் பூஸ்டர் ஊசியை போட்டுக் கொள்ளும்படி யாவருக்கும் அறிவுறுத்தப்பட்டு வருகின்றது எனவும் , தற்பொழுது உருவாகியிருக்கும் இவ் தொற்று நோயால் பெரும்பாலும் மரணம் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் குறைவாக காணப்படுகின்றபோதும் இவ் நோயின் வேகத்தை குறைப்பதற்காகவே இவ் பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளும்படி வேண்டப்பட்டுள்ளனர்.

இவ் தடுப்பூசியானது மன்னார் மாவட்டத்தில் சகல சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளிலும் ஒவ்வொரு சனிக்கிழமைகளில் வழங்கப்படுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாக அந்தந்த பகுதி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் கேட்டு அறிந்து கொள்ளும்படியும் பொது மக்கள் வேண்டப்பட்டுள்ளனர்.

அத்துடன் பொது இடங்களில் ஒன்றுகூடும்போதும் பிரயாணங்கள் செய்யும்போதும் கட்டாயம் ஒவ்வொருவரும் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும் எனவும் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட தொற்றுநோய் விஞ்ஞான பிரிவு வைத்திய கலாநிதி கதிர்காமநாதன் சுதாகர் இவ்வாறு மேலும் தெரிவித்தார்.

# உளநலம் பேணலின் முக்கியத்துவம் கருத்தரங்கு



**எப்.முபாரக்**

இலத்திரனியல் சாதனங்களிற்கு அடிமையாதல் மற்றும் உளநலம் பேணலின் முக்கியத்துவம் சம்மந்தமான விழிப்புணர்வு கருத்தரங்கு வியாழக்கிழமை( 4) திஃ கிண்ஃஅல்ஹிரா மு.ம.வி இல் இடம்பெற்றது. கிண்ணியா தள வைத்தியசாலையின் உளநலப் பிரிவினால் நடத்தப்பட்ட இவ்விழிப்புணர்வு கருத்தரங்கு திஃ அல்ஹிரா முஸ்லிம் மகாவித்தியாலய 9ம் தர மாணவிகளுக்கு நடத்தப்பட்டது.

பாடசாலை பிரதி அதிபர் எஸ்.எம். பைரூஸ் தலைமையில் நடைபெற்ற இவ் அமர்வில் கிண்ணியா தள வைத்தியசாலை உளநலப் பிரிவு வைத்தியர் எ.கே.எஸ். நஸ்மி வளவாளராக கலந்து சிறப்பித்தார்.இந்நிகழ்வை வழிகட்டல் ஆலோசனைப் பொறுப்பாளர் எ.டபிள்யூ.எம். கியாஸ் ஆசிரியர் நெறிப்படுத்தினார்.

# நுணாவில் ஐ.ஓ.சியில் மதகுருமாருக்கு முன்னுரிமை

**சாவகச்சேரி நிருபர்**

நுணாவில் ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் 06ஃ08 சனிக்கிழமை வடமாகாணத்தில் உள்ள மதகுருமார்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் பெற்றோல் வழங்கி வைக்கப்படும் என எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் வை.சிவராசா அறியத்தந்துள்ளார்.இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில் சனிக்கிழமை நண்பகல் 12தொடக்கம் 1.30 மணிவரை வடமாகாணத்தில் உள்ள கத்தோலிக்க மதகுருமார்களுக்கும்,பிற்பகல் 2மணி தொடக்கம் 4.30 மணி வரை வடமாகாணத்தில் உள்ள இந்து மற்றும் ஏனைய மதகுருமார்களுக்கும் நுணாவில் ஐ.ஓ.சியில் முன்னுரிமை அடிப்படையில் பெற்றோல் வழங்கி வைக்கப்படும். அதேவேளையில் சனிக்கிழமை காலை 10மணி தொடக்கம் 12மணி வரை ஜேஃ311 தொடக்கம் ஜேஃ313 வரையான கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த பொதுமக்களுக்கும் ஞசு முறைமையின் கீழ் பெற்றோல் விநியோகிக்கப்படும். எரிபொருள் பெற வருபவர்கள் தமது பிரதேசத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணம் ஒன்றினை கைவசம் வைத்திருக்க வேண்டுமெனவும் மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# காலிமுக ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றமிழைத்திருப்பின் பகிரங்க மன்னிப்பு வழங்க வேண்டும்



**(அஸ்லம் எஸ்.மௌலானா)**

காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றமிழைத்திருப்பின் அவர்களுக்கு, ஜனாதிபதி ரணில் தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் விதத்தில் பொது மன்னிப்பு வழங்க வேண்டும் என இலங்கை தென்கிழக்கு கல்விப் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பாக பேரவையின் தவிசாளரும் ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளரும் மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான ஏ.எல்.எம். முக்தார், ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்

காலிமுக ஆர்ப்பாட்டம், அதன் பின்னரான அனைத்து செயற்பாடுகளிலும் தொழிற்சங்கத் தலைவர்கள், சகல பல்கலைக்கழக மாணவர்கள், புத்திஜீவிகள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், மதத்தலைவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் எனப்பல தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர்.

இவர்கள் அனைவரும் எவ்வித அரசியல் கட்சிகளையோ, எந்த தீவிரவாத இயக்கத்தையோ சேர்ந்தவர்கள் அல்ல. ஆனால் அவர்களை நாட்டுத் தலைவர்– பாசிஸ்டுகள், குழப்பவாதிகள், ஆட்சிக் கவிழ்ப்பாளர்கள் என பட்டம் சூட்டினார். அத்துடன் ஆர்ப்பாட்டங்களில் முன்னணியில் நின்ற பலர் தற்போது தேடித்தேடி கைது செய்யப்படுகின்றமை பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

சமூகப் போராட்டங்களில் கலந்து கொள்பவர்களை எந்த நாட்டிலும் கைது செய்கின்ற வரலாறு இல்லை. அண்மையில் இந்தியாவில் இடம்பெற்ற விவசாயிகளின் போராட்டம் ஒரு வருடத்திற்கு மேல் இடம்பெற்றது. இறுதியில் இந்திய அரசாங்கம் அடிபணிந்து விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்றது. இதற்காக எந்த விவசாயியையும் இந்திய அரசாங்கம் கைது செய்வதற்கு முயற்சிக்கவில்லை.

காலிமுக ஆர்ப்பாட்டக்காரர்களின் போராட்டம் காரணமாகவே முன்னாள் ஜனாதிபதி கோட்டா நாட்டை விட்டு வெளியேறினார். இதன் காரணமாகவே ரணில் ஜனாதிபதியானார். எனவே காலிமுக ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு நன்றியுடையவராக ரணில் இருக்க வேண்டும். ஆனால் அவர்களை பலிவாங்குவதில் அரசாங்கம் தீவிரமாக செயற்படுவதை முழுநாடும் உணருகிறது. இது நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் ஆரோக்கியமானதல்ல.

அரசாங்கத்தின் தற்போதைய கைது நடவடிக்கைகள் இலங்கை அரசியலமைப்பு மூலம் உறுதிப்படுத்தப்பட்ட பேச்சு சுதந்திரம், கருத்து சுதந்திரம், ஒன்றுகூடும் சுதந்திரம், அரசியல் சுதந்திரம் என்பவற்றை ஒடுக்கும் செயற்பாடாகும். நேரடியாக இவற்றை மீறி செயற்படாது மிகவும் தந்திரமாக அடக்கி ஒடுக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. அரசின் இச்செயற்பாடுகள் ஐரோப்பிய நாடுகள் மத்தியில் இலங்கை அரசுக்கு மிகக் கெட்ட பெயரை பெற்றுத் தருவதுடன் பொருளாதார ரீதியாக நலிவடைந்து போன இலங்கை எடுக்கும் முயற்சிகளை மிகவும் மோசமாக பாதிக்கும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். உண்மையில் காலிமுக ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றமிழைத்திருப்பின் அவர்களுக்கு பகிரங்க மன்னிப்பை வழங்குவதன் மூலம் ஜனாதிபதி ரணில் தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்த முன்வர வேண்டும்– எனவும் ஏ.எல். எம்.முக்தார் வலியுறுத்தியுள்ளார்.








"வேண்டுவார் வினைதீர்க்கும் வேலவன் வீற்றிருக்கும் தாந்தாமலைப் பதியை தானாடிச் சென்றிடுங்கால் தொல்வினைகள் தீர்த்து துயரங்கள் அகன்று இன்பமுடன் வாழ்வார் உலகில்"

தாந்தாமலை ஸ்ரீ முருகனுக்கு மகோற்சவப் பெருவிழா - 2022

திருக்கொடியேற்றம்
22.07.2022 வெள்ளிக்கிழமை

தீர்த்தோற்சவம்
12.08.2022 வெள்ளிக்கிழமை

விளம்பர அனுசரணையாளர் : முத்துலிங்கம் அருட்செல்வம் (மகிழடித்தீவு)

# குடிநீர் அற்ற பாடசாலைக்கு குடிநீர் வசதி



( வாஸ் கூஞ்ஞ)

25 வருடங்களுக்கு மேலாக பாடசாலை ஒன்றில் குடிநீருக்கு தவித்துக் கொண்டிருந்த பாடசாலை மாணவர்களுக்கு மன்னார் றோட்டரி கழகம் குடிநீர் பெறுவதற்கான வசதிகளை வசதிகளை செய்து கொடுத்துள்ளது. நீண்ட காலம் குடிநீர் வசதி ,ல்லாமல் ,ருந்த தலைமன்னார் பியர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு 9 லட்சம் ரூபா செலவில் மன்னார் றோட்டரி கழகத்தின் ஏற்பாட்டில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டது

தலைமன்னார் பியர் பாடசாலையில் 450 அதிகமான மாணவர்கள் கல்வி கற்று வருகிறார்கள் 25 வருடங்களுக்கு மேலாக தூய குடிநீர் வசதிகள் ,ன்றி ஆசிரியர்கள் மாணவர்களும் பாரிய சிரமங்களை எதிர்கொண்டு வந்தார்கள் இவர்கள் குடிப்பதற்காக பக்கத்து மருத்துவமனையில் ,ருந்து குடிநீர் பெற்று வந்த நிலையில் தகவல் அறிந்த மன்னார் றோட்டரி கழக நிர்வாகத்தினர் மற்றும் அதன் மன்னார் மாவட்ட தலைவர் றொபின் ஜெயரூபன் தலைமையில் தலைமன்னார் பியர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து கொடுப்பது என்று முடிவு எடுக்கப்பட்டது

அதன் அடிப்படையில் பாடசாலை அதிபர் ஆசிரியர் மாணவர்களின் ஒத்துழைப்போடு கடந்த மாதம் ஆரம்பிக்கப்பட்ட வேலை திட்டம் நிறைவு பெற்று வியாழக்கிழமை (4) குடிநீர் திட்டம் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டு பாடசாலை நிர்வாகத்தினிடம் கையளிக்கப்பட்டது

இந்த நிகழ்வில் மன்னார் றோட்டரி கழகத்தின் அங்கத்தவர்கள் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள் பெற்றோர்கள் மாணவர்கள் என்று பலரும் கலந்து கொண்டார்கள் இதற்கான நிதி உதவியை அவுஸ்த்தேலியாவில் வசிக்கும் விக்னேஸ்வரன் கந்தையா அவர்கள் வழங்கி ,ருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

# குடியிருப்பொன்றிலிருந்து சிறுத்தை உயிருடன் மீட்பு

தலவாக்கலை பி.கேதீஸ்

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லோகி கூம்மூட் தோட்டத்தின் தொழிலாளர் குடியிருப்பொன்றிலிருந்து சிறுத்தையொன்று உயிருடன் மீட்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக தெரியவருவதாவது லோகி கூம்மூட் தோட்டத்தின் தொழிலாளர் குடியிருப்பொன்றின் கூரையை நேற்று இரவு(4) அதிகாலை சிறுத்தையொன்று உடைத்துக்கொண்டு உள்ளே வீழ்ந்து அதன் அறையில் மாட்டிக்கொண்டது. பாரிய சத்தம் கேட்டதையடுத்து குடியிருப்பில் இருந்தவர்கள் குறித்த அறையை பார்த்தபோது உறுமல் சத்தத்துடன் சிறுத்தை இருப்பதை கண்டு குறித்த அறையை மூடிவிட்டு அயலவர்கள் வீட்டில் இருந்துள்ளனர். விடிந்ததும் அயலவர்கள் சிலரின் உதவியுடன் சிறுத்தை இரவில் தப்பித்து ஓடியிருக்கும் என நினைத்து குடியிருப்பாளர் குறித்த அறையை திறந்தபோது சிறுத்தை சீறி பாய்ந்து இவர்களை தாக்கியுள்ளது. இதன்போது உடனடியாக கதவை மூடி இவர்கள் தப்பித்துள்ளனர். இதன்போது குடியிருப்பாளர் சிறுகாயங்களுக்குள்ளானார். இதேவேளை மற்றொரு நபர் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் லிந்துலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நுவரெலியா பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். குறித்த சிறுத்தையானது இரவில் வனப்பகுதியிலிருந்து நாய்களை வேட்டையாடுவதற்கு தோட்ட பகுதிகளுக்குள் புகுந்தபோது நாய்களை துரத்திச் சென்றபோது தவறி குடியிருப்பின் கூரை மீது விழுந்து அது உடைந்து குடியிருப்பின் அறையினுள் விழுந்திருக்கலாம் என வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்தனர்.

# காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளுக்கு உடனடித் தீர்வு வழங்குக!

## அங்கஜன் எம்.பி ஜனாதிபதியிடம் கோரிக்கை.



(சாவகச்சேரி நிருபர்)

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு உடனடித் தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார். 04ஃ08 வியாழக்கிழமை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும்– ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையிலான முக்கிய சந்திப்பொன்று ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற போதே சுதந்திர கட்சியின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் இதனை வலியுறுத்தியிருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில், காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் நீண்ட காலமாக ஓர் தீர்வுத்திட்டம் இன்றி சிரமப்படுகின்றனர்.

அவர்களுக்கு வீட்டு வசதி,வேலைவாய்ப்பு,உயர் கல்வி போன்ற நிலையான சிறந்த உதவித்திட்டங்களை விரைந்து வழங்கி அவர்களை மீட்டெடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் வடக்கு– கிழக்கு மாகாணங்களுக்கான பொருளாதார மறுமலர்ச்சியை ஏற்படுத்தி வறுமை ஒழிப்பினை ஏற்படுத்தும் முகமாக ஜனாதிபதி செயலணி

ஒன்றை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.மேலும் யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள வடமாகாணத்தின் முக்கிய தொழிற்துறைகளான கே.கே.எஸ் சீமெந்து தொழிற்சாலை,பரந்தன் இரசாயன தொழிற்சாலை,ஒட்டிசுட்டான் கூரை ஓட்டுத் தொழிற்சாலை மற்றும் ஆணையிறவு உப்பளம் ஆகியவற்றை மீள ஆரம்பித்து நாட்டின் உற்பத்தித் திறனை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென மேலும் அவர் ஜனாதிபதியிடம் கோரியிருந்தார். ஜனாதிபதியுடனான குறித்த சந்திப்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட கட்சியின் பிரமுகர்கள் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



“தா” என்றால் “இந்தா” என்று வழங்கும்
தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலய
வருடாந்த மகோற்சவப் பெருவிழா 2022
திருக்கொடியேற்றம்
22.07.2022 வெள்ளிக்கிழமை
தீர்த்தோற்சவம்
12.08.2022 வெள்ளிக்கிழமை
அனைவரும் வருக! முருகன் திருவருள் பெறுக!
விளம்பர அனுசரணையாளர் : தாந்தியான் வேதநாயகம் (முனைக்காடு)